## சிறந்த ஒழுக்கப் பண்புடன் செயற்படுவோம்.

- ஒழுக்கம் என்பது, சமூகத்தின் எதிர்பாப்புக்கேற்ப செயற்படுவதும், சட்டதிட்டங்களை மதித்தலும் ஆகும். ஒழுக்கம் என்பது விதிமுறைகளின்படி செயற்படுதலாகும். ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல், அன்பு செலுத்துதல், ஒருவரது தவறை ஏற்றுக்கொள்ளுதல், மன்னிப்புக்கோரல் என்பன ஏற்படுத்துவது ஒழுக்கமும் நன்னடத்தையும் இருப்பதனாலாகும்.

- ஒழுக்கமும் கட்டுப்பாடும் தனி மனித முன்னேற்றத்திற்கு உதவுவது போன்றே சமூகத்தின் அபிவிருத்திக்கும் பாரிய பங்களிப்புச் செய்கின்றது என்பதுடன் அமைதியான சமூகத்திற்கு இது ஒரு சக்தியாகவும் அமைகின்றது.

- **செயற்பாடு :-**

1. நன்னடத்தை, ஒழுக்கக் கட்டுப்பாடு என்பவற்றை விருத்தி செய்ய தேவையான பண்புகள் எட்டைக் (08) குறிப்பிடுக.

2. சிறந்த ஒழுக்க மாண்புகளை பேணும் போது

   I. குடும்பத்தில் II. சமூகத்தில்

   III. வீதிகளில் IV. பாடசாலைகளில்

   ஆகிய இடங்களில் நடந்து கொள்ள வேண்டிய நன்னடத்தை முறைகள் ஐந்து வீதம் குறிப்பிடுக.

3. சிறந்த ஒழுக்க மாண்புகளைப் பேணுவதன் முக்கியத்துவம் 08ஐக் குறிப்பிடுக.

.